TAMIL MURASU 20 FEB 09

தமிழ் முரசு

### ஈஷா யோக மையத்தில்

# சிவராத்திரி கோலாகலம் விடிய விடிய நடக்கிறது

## ஜக்கி வாசுதேவ் பங்கேற்பு

**கோவை, பிப். 20-**

கோவை ஈஷா யோக மையத்தில் மகா சிவராத்திரி விழா 23ம் தேதி இரவு விடிய விடிய நடக்கிறது.

கோவை பூண்டி வெள்ளிங்கிரிமலை அடிவாரத்தில் ஈஷா யோக மையம் உள்ளது. தொடர்ந்து 15வது ஆண்டாக 23ம் தேதி மகா சிவராத்திரி விழா கொண்டாப்படுகிறது. மாலை 6 மணிக்கு தியானலிங்க நாத ஆராதனையுடன் விழா துவங்கும். ஜக்கி வாசுதேவ் அருளுரை, குருபூஜை, இன்னிசை நிகழ்ச்சிகள், மகா அன்னதானம், தியானம் நடக்கிறது. நள்ளிரவு 12 மணிக்கு மஹாமந்திர உச்சாடனை, தீட்சை வழங் கும் நிகழ்ச்சி நடைபெறும். அதிகாலை வரை இன்னிசை நிகழ்ச்சி நடக்கிறது.

இந்தியன் ஓஷன், நாத பிரம்மா, குண்டேசா சகோதரர்கள் மற்றும் சவுண்ட்ஸ் ஆப் ஈஷா குழுவினர் இன்னிசை வழங்குகின்றனர். சினிமா பாடகர் தீபன் சக்ர வர்த்தி, பாடகி ஸ்ரீலேகா பாடுகின்றனர். பஸ் வசதி, பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது. இதை ஈஷா அறங்காவலர் திலீப், திட்ட ஒருங்கிணைப்பாளர் சேகர், சுவாமி திரிதமா ஆகியோர் தெரிவித்தனர்.